**19.03.2024 OS.No.124/2018**

வா.சா. **2** பெயர்: கணேசன்

சாட்சி ஆஜர். பிரமாண செய்யப்பட்டார் **3** முதல் **7**-பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

என் தாயார் வழக்கிட்டு உள்ளார். அவர்ருடைய தாயார் குடும்ப சொத்தில் பாகம் கோரி வழக்கிட்டு உள்ளார். தாவா சொத்துகள் என் பாட்டிற்கு அரசால் வழங்கப்பட்டு உள்ளது ஆகும் அதற்காக ஆவணங்களை தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். இதனால் வரையில் தாவா சொத்துகளின் வருவாய் ஆவணங்கள் என் பாட்டி மற்றும் பாட்டனார் பெயரில் இருந்ததா என்றால் பிரதிவாதிகள் பாகம் பிரிப்பிற்கு முன் வகையில் இருந்தது. எவ்வகையில் எப்பொழுது பாகம் பிரித்து கொண்டார் என்றால் தெரியாது. 1999 முதல் 2010 வரையில் நாங்களும் சேர்ந்து பயிர் செய்து வந்தோம். அந்த கால கட்டத்தில் சுமார் எனக்கு 20 வயது இருந்து இருக்கும். தாவா சொத்தின் கிழக்கில் பொது பாதை, வடக்கு திருவண்ணாமலை நெடுஞ்சாலை, தெற்கில் சென்றாயன் நிலம், மேற்கில் கரியன் நிலம் உள்ளது. நான் குறிபிடும் செக்குப்பந்தி விவரம் தவறானது என்றால் சரியல்ல. நான் எப்பொழுதும் கூட்டு சுவாதினத்தில் இருந்தது இல்லை என்றாலும் 3 முதல் 7 பிரதிவாதிகள் சுவாதினத்தில் இருந்த வகையில் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது எனக்கு தெரியும் என்றால் இல்லை. என் தாயாரின் பெற்றோர்கள் உயிருடன் இருந்த போது தேவையான அளவிற்கு சீர் வரிசை செய்து இருந்தார்கள் என்றாலும் அந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. என் தாயாரது பெற்றோர்கள் காலமான 30 ஆண்டுகளுக்கு பிறகு வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றாலும் அந்த வகையில் தாவா நிலைக்க தக்கது இல்லை என்றால் சரியல்ல. அந்த வகையில் தாவா சொத்தில் என் தாயாருக்கு பாக உரிமையே பின் தொடர்ச்சியோ எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai